பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 06 | ஞாயிற்றுக்கிழமை | 22.09.2024 | அதிர்வு 051

## நாளை திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை

இலங்கையில் நாளை திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அநுர வெல்வது நிச்சயம்

### இன்று மாலை ஜனாதிபதியாகப் பதவியேற்பார் என எதிர்பார்ப்பு

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார்.

தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் அதிகூடிய வாக்குகளுடன் அவர் முன்னிலை வகிக்கின்றார்.

தபால் மூல வாக்களிப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அநுரகுமார திஸாநாயக்க 50 சதவீதத்துக்கும் மேல் வாக்குகளை வசமாக்கி முதலிடம் பெற்றுள்ளார். 06

## இன்று காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம்!




நாடளாவிய ரீதியில் நேற்று இரவு 10 மணி முதல் இன்று காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் 06




நகைச்சுவை நடிகர் வடிவேலுவை எண்ணும் போது சில சமயங்களில் நான் பிரமிப்பதுண்டு.

பிற்காலத்தில் நமது அரசியல் தலைவர்கள் எப்படி, எப்படியெல்லாம் குளறுபடி பண்ணுவார்கள் என்று ஞானக் கண்களால் முற்கூட்டியே உய்த்துணர்ந்தோ என்னவோ நேரத்துடன் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான ஒவ்வொரு நகைச்சுவைக் காட்சியைத் தமது சீன்களில் அவர் பொருத்தி விட்டிருக்கின்றார்.

தேர்தலில் 'தென்னை மரம் சின்னத்துக்கு ஒரு குத்து, ஏணிச் சின்னத்துக்கு ஒரு குத்து!' – என்ற அவரின் நகைச்சுவைக் காட்சி நம் தமிழரசுத் தலைவருக்கென்று முன்கூட்டியே பிளான் பண்ணி தயாரிக்கப்பட்ட காட்சி போன்று எனக்குப் படுகின்றது.

தெல்லிப்பளை மாவிட்டபுரத்தில்

நேற்றுப் பகல் ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்துவிட்டு வாக்குச்சாவடிக்கு 06




# 106 வயதில் மூத்த குடிமகன் நேற்று திருகோணமலையில் வாக்களிப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தின் மூத்த குடிமகன் 106 வயதில் தனது வாக்கை நேற்றுப் பதிவு செய்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றது.

வாக்களிப்பு நேற்றுக் காலை ஏழு மணியிலிருந்து மாலை 4 மணி வரை இடம்பெற்றது.

திருகோணமலையின் மூத்த பிரஜையான ஜோன் பிலிப் லூயிஸ், திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், "நாட்டில் இடம்பெற்ற ஒன்பது ஜனாதிபதித் தேர்தல்களிலும் வாக்களித்த அனுபவம் எனக்கு உண்டு. நல்லதோர் ஆட்சியாளர் வரவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. இறைவனது ஆசியுடன் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தலிலும் வாக்களிக்க தயாராக இருக்கிறேன்" – என அவர் குறிப்பிட்டார்.

# கடந்த 24 மணித்தியாலங்களில் 337 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு




ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 24 மணித்தியாலங்களில் 337 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 125 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 211 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 551 ஆக அதிகரித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 5,401 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 34 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம், கிடைக்கப் பெற்ற மொத்த முறைப்பாடுகளில் 4 ஆயிரத்து 929 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. 622 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, நேற்று தேர்தல் வாக்குப் பதிவுகளின் போது வன்முறைகள் எதுவும் பதிவாகி இருக்கவில்லை என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# ஊடகவியலாளரின் மீது தாக்குதல் மருதமுனையில் நேற்றுச் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஊடகக் கடமைகளில் ஈடுபட்டிருந்த சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார் என்றும் அவரது மோட்டார் சைக்கிளும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் கல்முனை தேர்தல் தொகுதியில் உள்ள மருதமுனை பொது நூலக முன்றிலில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மருதமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் அப்துல் வாஹிட் முகம்மது ஜெஸீல் என்பவரே தாக்குதலில் காயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


இத்தாக்குதல் தொடர்பில் கல்முனை பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு, அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட தரப்பிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட ஊடகவியலாளர் பெரிய நீலாவணை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஊடகவியலாளரின் கால் பகுதி கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளது. அவரது மோட்டார் சைக்கிளும் உடைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்துப் பெரியநீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
















# ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேரம் திருத்தம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேரத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, தேர்தல்கள் ஆணைக் குழுவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டது.

முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்கமைய, மாலை 4 மணிவரையில் மட்டுமே வாக்களிப்பதற்கு சந்தர்ப் பம் அளிக்கப்பட்டு வந்தது.

எனினும், நேற்றைய ஜனாதிபதித் தேர்தலில், மாலை 4 மணிக்கு வாக்களிப்பு நிலையத்தில், வரிசையில் நின்ற சகல வாக்காளர்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங் கப்பட்டது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித் தது.

எவ்வாறாயினும், மாலை 4 மணிக்கு பின்னர், வாக்களிப்பு



நிலையங்களுக்கு வருபவர்களுக்கு வாக்களிக்க முடியாது என அறிவிக்கப்பட்டது.

# அரசியல் வரலாற்றையே இந்தத் தேர்தல் மாற்றும்

## அநுர அநுரகுமார திஸநாயக்க நம்பிக்கை



இந்த ஜனாதிபதித் தேர்தல், இலங்கை வரலாறை மாற்றும் தேர்தலாக அமையும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனா திபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித் தார்.

நேற்று வாக்களிப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

இந்த ஜனாதிபதி தேர்தல் இலங்கை வரலாற்றை மாற்றும் தேர்தலாக அமையுமென நான் கருதுகிறேன். அரசாங்க மொன்றை அமைக்கவும், ஆட்சி கவிழ்ப்பதற்காகவும், அரசாங்கத்தை மாற்றவும், தலைவர்களை மாற்றவும் நீண்ட காலமாக தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் இந்தத் தேர்தல் நாட்டின் முக்கிய திருப்பு முனையாக இருக்குமென கருதுகிறேன்.

எனவே வெற்றியின் பின்னர் சகலரும் அமைதியைப் பேண வேண்டும். எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதர வளிக்கவும் விரும்பும் கட்சிகளுக்கு வாக்களிக்கவும் ஒவ்வொரு நபர்களுக்கும் உரிமை வழங்குவதே ஜனநாயக அம்சமா கும். அதனை தொடர்ந்தும் நாங்கள் பாதுகாப்போம். – என் றார்.

# எதிர்வரும் நாள்களில் நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு திட்டம் நடைமுறைக்கு



எதிர்வரும் நாள்களில் நாடளாவிய ரீதியில் விசேட பாது காப்பு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேர்தலிற்கு பிந்தைய நாள்களில் பொதுமக்களின் பாது காப்பை உறுதி செய்வதற்காகவே இந்த விசேட நடவடிக்கை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலகம் அடக்கும் பொலி ஸாரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முக்கியமான பகுதிகளில் வீதித் தடைகளை அமைத்துள்ளோம். தேர்தல் முடிவுகள் முழுமையாக உத்தியோகபூர்வமாக வெளியாகும் வரை இந்த விசேட பாதுகாப்பு திட்டம் தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

பேரணிகளிற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித் துள்ள அவர் பொதுமக்கள் இந்த விதிமுறைகளை பின் பற்றவேண்டும், சட்டமொழுங்கை பேணுவதில் சட்ட அமுலாக் கல் அதிகாரிகளிற்கு உதவவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் எவராவது ஈடுபடுவது தெரிந்தால் உடனடியாக பொலிஸா ருக்கு அறிவிக்கவேண்டும் என வேண்டும் என வேண்டு கோள் விடுத்துள்ள பொலிஸ் பேச்சாளர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிப்பதற்காக பொதுமக்கள் பயன்படுத்துவதற் கான தொலைபேசி இலக்கங்களை வெளியிட்டுள்ளார்.

# அமைதியான முறையில் வாக்களிப்பு இடம்பெற்று

## பவ்ரக் அமைப்பு தகவல்

9 ஆவது ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு அமைதியாக நடைபெற்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன .

அதன்படி, பாரியளவில் வன்முறைச் செயல்கள் எதுவும் பதிவாகவில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வன்முறைச் சம்பவமும் பதிவாகவில்லை எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றன என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பான எவ்வித சம்பவங்களும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டாலும் அவருக்கு ஆதரவு என்கின்றார் மைத்திரிபால!



எவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டாலும் அவருக்கு ஆதரவளிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் வாக்களித்த பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களிற்காக அரசாங்கம் 40 பில்லியனை செலவிடவேண்டும் என்பதால் புதிய ஜனாதிபதி பல சவால் களை எதிர்கொள்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலிற்கான செலவு மாத்திரம் பத்து பில்லியன் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மாகாணசபைகள், உள்ளூராட்சித் தேர்தல்களிற்காக மேலும் பத்து பில்லியனை செலவிடவேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த செலவுகளுடன் புதிய ஜனாதிபதி பொருளாதாரத்தை கையாள்வது, பொதுமக்களிற்கு சேவைகளை வழங்குவது போன்றவற்றில் பெரும் சவால்களை எதிர்கொள்வார் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை. ஆனால் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளேன். – என அவர் தெரிவித்துள்ளார்.

## மக்களால் தெரிவு செய்யப்படுபவருக்கு

# ரணில் வழிவிடுவார் என நான் எதிர்பார்க்கின்றேன்



## அநுரகுமார தெரிவிப்பு

அமைதியான முறையில் அதிகார மாற்றம் குறித்து தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பொதுமக்கள் அமைதியைப் பேண வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழிவிடுவார் என எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகார மாற்றத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்தப் பிரச்சினையையும் உருவாக்குவார் எனத் தான் எதிர்பார்க்கவில்லை என்றும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவை யில்லை எனத் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி விடுத்துள்ள அறிக் கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவது முற்றிலும் அமைதியை நிலைநாட்டும் நோக்கத்திற்காகவே என எதிர் பார்க்கிறோம்.

ජාතික ජන බලවේගය
தேசிய மக்கள் சக்தி
JATHIKA JANA BALAVEGAYA (NPP)

அத்துடன், வாக்கு எண்ணிக்கை தடைப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவை வலியுறுத் துகிறோம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியே வந்து அவர் அளித்த பேட்டி 'தென்னை மரச் சின்னத்தில் ஒரு குத்து ஏணிச் சின்னத்தில் ஒரு குத்து!' – என்ற கதை மாதிரியே இருந்தது.

முதலில், தேர்தல் வாக்களிப்பு முடி வடைவதற்கு முன்னர் எந்த கட்சிக்கு – எந்தத் தரப்புக்கு – வாக்களித்தேன் என்று பகிரங்கமாக அறிவிக்க முடியாது. அது தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றம். தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நேரடி அரசியலில் பரிச்சயமுள்ளவர். அவருக்கு தேர்தல் நடந்து கொண்டிருக்கும்போது தாம் யாருக்கு வாக்களித்தார் என்று பகிரங் கமாக அறிவிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பது விளங்கவில்லைப் போலும். வேடிக்கை மனிதர் இவர்...!

'தமிழரசுக் கட்சி முடிவுப்படி சஜித் துக்கு முதல் வாக்கு. தமிழ் தேசியத்திற் காக இரண்டாவது வாக்கு சங்குக்கு. மூன்றாவது வாக்கு ரணிலுக்கு!' – என்று அவர் கோமாளித்தனமாக அறிவித்திருக் கிறார். பொதுவேட்பாளர் அரியநேத்திரன் முதல் இரண்டு இடங்களில் ஒன்றை ஒரு போதும் பெறமாட்டார். அவருக்கு அளிக் கப்படும் இரண்டாவது வாக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் கணக்கெடுக்கப்ப டவே மாட்டாது என்பது உறுதி. அப்படி இருக்கையில் அவருக்கு இரண்டாவது வாக்கினை அளித்து இருக்கின்றார் என்று கூறி இருக்கிறார் மாவை. அர்த்தமற்ற வாக்களிப்பு.

கையேந்திய குற்றத்துக்காக ரணி லுக்கு மூன்றாவது வாக்கை அளித்தி ருக்கின்றார் போலும்.

தமிழர்கள் விடுதலை பெறுவதற்காக இந்த வாக்குகளை அளித்திருக்கிறோம் என்று வேறு அவர் பீற்றியிருக்கிறார்.

பாவம் தமிழரசு...! இவரையெல்லாம் தலைவராக கொண்டு அக்கட்சி இயங்க வேண்டி இருக்கிறதே...!

\+ \+ \+

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கா இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கத் தயாராகின்றார் என கொழும்பு வட்டா ராம் ஒன்று இன்று அதிகாலை செய்தி வெளியிட்டது.

## இன்று காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

நாட்டில் தற்போது அமைதியான சூழல் நிலவினாலும் மக்களின் மேலதிக பாது காப்புக் கருதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலப் பகுதியில் மக்களைத் தங்களது இருப்பிடங்களிலேயே நேரத்தை செல விடுமாறு கோரப்பட்டது.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கின்ற தரப்பினர் தங்களது நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள ஆவணத்தை அல்லது கடிதத்தை ஊரடங்கு கால பிரவேச ஆவணமாகப் பயன்படுத்த முடியும் என்றும் பொலிஸ் அறிவுறுத்தியுள்ளது.

## அநுர வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, கிழக்கு மாகாணத் தில் திருகோணமலை மாவட்டத்திலும் தபால் மூல வாக்களிப்பில் அநுரகுமார முதலிடம் பெறுள்ளார்.

தேர்தல் முடிவுகளின் பிரகாரம் அநுர குமார அதிகூடிய வாக்குகளைப் பெற்று வருவதால் இரண்டாம் சுற்றுக்குக்குச் செல்லாமல் முதல் சுற்றிலேயே வாக்கு எண்ணும் பணிகள் நிறைவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று மாலைக்கு முன்னர் தேர் தல் முடிவுகளின் அறிவிப்புக்கள் நிறை வுக்கு வரும் என்றும், இன்று மாலை அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற் பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தற்போது அறிவிக்கப் பட்டு வரும் தேர்தல் முடிவுகளின் பிரகா ரம் வடக்கு, கிழக்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ முன்னிலை வகித்தாலும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கிய செல்வம் அரியநேத்திரனுக்கும் கணிச மான வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன.






# ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட 8,000 உள்நாட்டு, வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள்

## வாக்குப்பதிவு அமைதியாக இடம்பெற்றதாகத் தெரிவிப்பு

உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 8000 கண்காணிப்பாளர்கள் நேற்று நடைபெற்ற நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன், தொடர்ந்து நடைபெறவுள்ள வாக்குகள் எண்ணும் செயன்முறையையும் கண்காணிக்கின்றனர்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. இத்தேர்தல் செயன்முறை சுதந்திரமானதும் நியாயமானதும் முரண்பாடுகள் அற்றதுமான விதத்தில் நடைபெறுகின்றதா என்பதை கண்காணிப்பதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 8,000 பேர் நாடளாவிய ரீதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதன்படி, சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நச்சோ சன்செஸ் ஆமர் தலைமையிலான 68 பேரடங்கிய கண்காணிப்புக் குழுவினரும், பொதுநலவாய அமைப்பின் சார்பில் சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி ஃபோர் தலைமையிலான 13 பேரடங்கிய கண்காணிப்புக் குழுவினரும், சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பின் சார்பில் 10 பேரடங்கிய கண்காணிப்புக் குழுவினரும், சர்வதேச நாடுகளின் சார்பில் சார்க் நாடுகள் மற்றும் ரஷ்யாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 7 கண்காணிப்பாளர்களும் உள்ளடங்குகின்றனர்.

அதேபோன்று உள்நாட்டில் இயங்கிவரும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (பவ்ரல்) சார்பில் சுமார் 4000 கண்காணிப்பாளர்களும், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான பிரசாரத்தின் (கஃபே) சார்பில் 1,750 கண்காணிப்பாளர்களும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி கஃபே அமைப்பினால் 120 நடமாடும் கண்காணிப்பு வாகனங்களும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன எனவும் அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மாக்கீன் தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் முக்கிய தேர்தல் மாவட்டங்களை இலக்காகக்கொண்டு 25 நடமாடும் தேர்தல் கண்காணிப்பாளர் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன், அக்குழுக்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் உள்ளடங்குகின்றனர்.

இக்கண்காணிப்பாளர்கள் அனைவரும் நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் தேர்தலுக்கு முன்னரான பிரசார செயன்முறைகள், தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு செயன்முறை, வாக்கு எண்ணல் மற்றும் முடிவு அறிவிக்கும் செயன்முறை, தேர்தலுக்குப் பின்னரான சூழ்நிலை ஆகியவற்றை பரந்துபட்ட ரீதியில் கண்காணித்து வருகின்றனர்.

அதற்கமைய நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் அமைதியான முறையில் வாக்குப்பதிவு இடம்பெற்றிருப்பதாகவும், இந்நிலை தொடர்வதன் ஊடாகவே சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் செயன்முறையை உறுதிப்படுத்த முடியும் எனவும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி தேர்தலுக்கான கடமையில் 83 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள்



ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளுக்காக 83 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு முடிவடைந்தது.

இந்நிலையில், தேர்தல் நடவடிக்கைகளுக்காக 83 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் 2,500 பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நாடளாவிய ரீதியில் 51 தேர்தல் வாக்கெண்ணும் நிலையங்களும் 13,421 வாக்கெடுப்பு நிலையங்களும் காணப்படுகின்றன.

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு 17,140,354 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

எவ்வாறிருப்பினும், இந்த ஜனாதிபதி தேர்தல் இலங்கையின் மிகவும் அமைதியான தேர்தலாக கருதப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது தகவல்களை வழங்குவதற்கு 119, 107, 118 (வடக்கு மற்றும் கிழக்கு) 011 202 7149 / 011 201 3243 மற்றும் பக்ஸ் - 111 239 9104 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்."- என்றார்




# கொழும்பு விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன. 200 இற்கும் மேற்பட்ட விமானப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# அமைதியான முறையில் வெற்றியை கொண்டாடுங்கள் ஜனாதிபதி வேட்பாளர்கள் பொதுமக்களிடம் கோரிக்கை






"தேர்தல் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுங்கள். வன்முறைகளுக்கு இடமளிக்க வேண்டாம்."

– இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, அனுர குமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் பொதுமக்களிடம் வலியுறுத்தினார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்று காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெற்றது. பெருமளவிலான மக்கள் ஆர்வத்துடன் காலை வேளையில் வாக்களித்தனர்.

சுயேச்சை வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண்மணி மைத்ரி விக்கிரமசிங்க ஆகியோர் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையத்தில் பொதுமக்களுடன் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க –

"எனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாக்களிப்புக்கான வரிசையை நானே தோற்றுவித்தேன். அன்றைய ஸ்திரமற்ற நிலை நீடித்திருந்தால் வாக்களிப்பு இடம் பெற்றிருக்காது. அமைதியான முறையில் தேர்தல் இடம்பெற்றது. புதிய பயணத்தை நோக்கி செல்வோம். வன்முறையற்ற வகையில் அமைதியாக செயற்படுங்கள். போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்."– என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க வாக்களித்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

"இலங்கை அரசியல் வரலாற்றை மாற்றியமைக்கும் தேர்தலாக இந்த தேர்தல் காணப்பட்டது. இலங்கையில் காலம் காலமாக அரசாங்கத்தையும், ஆட்சியாளர்களையும் மாற்றுதற்கு தேர்தல் இடம்பெற்றுள்ளது. இந்த தேர்தல் தான் முறைமை மாற்றத்துர்க்காக இடம்பெற்றுள்ளது. வெற்றியை அனைவரும் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். ஜனநாயக ரீதியில் தமது விரும்பும் அரசியல் தரப்பினருக்காக செயற்படவும், வாக்களிக்கவும் அனைவருக்கும் உண்டு அதனை பாதுகாக்க வேண்டும்.

நாட்டுக்கு புதிய அரசியல் கலாச்சாரம் அவசியம்.வெற்றி யாருடையதாக இருந்தாலும் அதனை அமைதியாகவும், வன்முறையற்ற வகையிலும் கொண்டாட வேண்டும்."– என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமாஸ அவரது பாரியாரான ஜலனி பிரேமதாஸவுடன் ராஜகிரிய பகுதியில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

"ஜனநாயக முறையில் தேர்தல் இடம்பெற்றது. ஆகவே ஜனநாயக அம்சங்களை பாதுகாக்க வேண்டியவது அவசிமானது. வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுங்கள். வன்முறையற்ற சூழலை தோற்றுவிக்கும் பொறுப்பு அனைத்து அரசியல் தரப்பினருக்கும் உண்டு."– என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வீரகெடிய மெதமுல்ல வித்தியாலயத்தில் வாக்களித்தன் பின்னர் –

"யாருக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். மக்களாணையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அமைதியான முறையில் வெற்றியைக் கொண்டாட வேண்டும்."– என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வரலாற்றுத் திருப்புமுனை

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் வன்முறைகளற்ற மிக அமைதியான வாக்களிப்பு நேற்று ஜனாதிபதி தேர்தலை ஒட்டி நடைபெற்று முடிந்திருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்னாயகா தெரிவித்திருக்கின்றார்.

வாக்களிப்புக்கு பின்னரான விடயங்களும் - வாக்கு எண்ணிக்கையில் தொடங்கி உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் வெளியிடுவது வரையான செயற்பாடுகளும் - வன்முறைகள், குழப்பங்களின்றி முடிவடையுமானால் இது வரலாற்றில் மிக முக்கியமான தேர்தலாகக் கருதப்படும் என்பது நிச்சயம்.

மிகுந்த மக்கள் செல்வாக்குடன் அதிகாரத்துக்கு வந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதியை மக்களே குறுகிய காலத்தில் கிளர்ந்தெழுந்து நாட்டைவிட்டுத் துரத்திய சீற்றத்தின் பின்னணியில் நேற்றைய தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது.

அந்த 'அறகலய' சீற்றத்தின் மூலம் மக்கள் 'அரசியல் முறைமை மாற்றம்' - 'சிஸ்டம் சேஞ்ச்' - ஒன்றை வலியுறுத்தி நின்றனர். ஆனால் அதற்கு வாய்ப்பளிக்கப்படாத நிலையில், இரண்டு ஆண்டுகள் கழித்து இந்த தேர்தல் நடத்தப்படுகின்றது.

முன்னைய ஆட்சியாளரை வெகுண்டெழுந்து துரத்திய மக்கள், அதை அடுத்து ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் ஊடாக எதிர்பார்த்த முறைமாற்றம் வராதமையால் அதிருப்தியில் உள்ளனர். அந்த அதிருப்தியை - ஆட்சேபத்தை - நேற்றைய வாக்களிப்பு மூலம் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள் என்பதையே நேற்று நள்ளிரவு முதல் வெளியாகத் தொடங்கிய ஆரம்பகட்டத் தேர்தல் முடிவுகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

நேற்று வாக்களிப்பு முடிவு வரையில் எந்த வன்முறையும் இல்லாத போதிலும், வாக்கு எண்ணிக்கை தொடங்கிய பின்னர் மோசமான நிலைமை உருவாகாத போதிலும், நேற்று இரவு 10 மணி முதல் ஊரடங்கு சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

இது பொதுவான முன்னேற்பாட்டு திட்டம் என்று கருதப்பட்டது.

தபால் மூல வாக்கு எண்ணிக்கையின் ஆரம்ப கட்ட போக்கு, இரண்டாம் சுற்று வாக்குக் கணக்கெடுப்பு தேவையற்றதாகி விடுமோ என்ற கருத்தைத் தந்து நின்றது.

தபால் மூல வாக்குகளை அளித்தவர்களில் அதிகமானோர் படையினரும் பொலிஸாரும் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்களும்தான். ஜனாதிபதி தெரிவு தொடர்பில் அவர்களின் சிந்தனைப் போக்குத்தான் சாதாரண - சாமானிய - மக்களின் கருத்தாகவும் இருக்குமானால் பெரும்பாலும் இரண்டாம் சுற்று எண்ணிக்கை கணக்கெடுப்பு தேவையற்றதாகிவிடும்.

அதையும் தாண்டி, இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டாலும், முதல் சுற்றில் எட்டப்பட்ட மேலதிகத்தைத் தாண்டும் அளவுக்கு இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை மாற்றத்தை கொண்டு வராது என்ற கருத்தே வாக்குக் கணக்கெடுப்பு அவதானிகளின் நிலைப்பாடாக இருந்தது.

முதல் சுற்றில் வரக்கூடிய அதிக வித்தியாசமான மேலதிகவாக்குகளை இரண்டாவது சுற்று கணக்கெடுப்பில் மேவ முடியாத நிலையில் முதல் சுற்றில் வென்றவரே இறுதியில் வெல்லுவார் என்னும் ஊகமும் தெரிவிக்கப்பட்டது.

இதுதான் நிலைவரம் என்றால் நாட்டில் தேர்தல் முடிவை ஒட்டிய பதற்றங்கள், குழப்பங்கள், வன்முறைகளுக்கு இடம் இருக்காது.

வாக்களிப்பு முடிந்த கையோடு தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கா கூறியமை போல இந்தத் தேர்தல் வரலாற்றுத் திறப்புமுனையை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்து விடும்.

# த.வெ.க. மாநாட்டுப் பணி ஒரு வாரத்தில் தொடங்கும்

## புஸ்ஸி ஆனந்த் தகவல்




தமிழக வெற்றிக் கழகம் மாநாட்டில் கலந்து கொள்வோரின் விவரங்களை தலைவர் விஜய் முறைப்படி அறிவிப்பார் என்று அக்கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் துவங்கியுள்ள தமிழக வெற்றிக் கழக கட்சி வரும் 2026 சட்டசபை தேர்தலை இலக்காக கொண்டு பணியாற்றி வருகிறது. கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து நடிகர் விஜய், மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் நிர்வாகிகளிடம் தொடர்ந்து ஆலொசனை நடத்தயதை தொடர்ந்து. விக்கிரவாண்டி அருகே வருகின்ற 23 ஆம் திகதி தமிழக வெற்றிக் கழக முதல் மாநாடு நடத்த அனுமதி வேண்டி கடந்த 28 ஆம் திகதி விழுப்புரம் மாவட்ட பொலிஸிடம் மனு அளிக்கப்பட்டது. அன்றே கூடுதல் பொலிஸ் கண்காணிப்பாளர் திருமால் மாநாடு நடைபெற உள்ள இடத்தை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்பினார்.

இதனை தொடர்ந்து செப்டம்பர் 1 ஆம் திகதி அப்போதைய விழுப்புரம் டி.எஸ்.பி. சுரேஷ், தமிழக வெற்றிக் கழக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்துக்கு அனுப்பிய கடிதத்தில், 21 கேள்விகள் கேட்கப்பட்டது. இதற்கான பதிலை செப்டம்பர் 6 ஆம் திகதி த.வெ.க. சார்பில் பதிலளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து செப்டம்பர் 8 ஆம் திகதி மாநாடு நடத்திக்கொள்ள பொலிஸ் 33 நிபந்தனைகளுடன் அனுமதி அளித்தது. இந்நிலையில், செப்டம்பர் 23 இல் மாநாடு நடத்த பொலிஸ் அனுமதி அளித்தது. இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் மாநாடு திகதியை நடிகர் விஜய் ஒக்டோபர் 27 இற்கு மாற்றி அறிவித்தார்.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை மாநிலப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் கூடுதல் பொலிஸ் கண்காணிப்பாளரிடம் மனு ஒன்றை அளித்தார். இதனைத் தொடர்ந்து புஸ்ஸி ஆனந்த் செய்தியாளர்களிடம் கூறும்போது,

“மேடை அமைப்பது, பேரி கார்டு அமைப்பது உள்ளிட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. அறிவித்தபடி வருகின்ற ஒக்டோபர் 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு மாநாடு தொடங்கும். மாநாடு பணிகள் ஒரு வாரத்தில் துவங்கும். இம்மாநாட்டில் கலந்து கொள்வோரின் விவரங்களை முறைப்படி தலைவர் விஜய் அறிவிப்பார்” என்று அவர் கூறினார்.

# தமிழன் ஒருவன் பிரதமராகி நாட்டை தயார்ப்படுத்த வேண்டும்

## ம.நீ.ம. பொதுக்குழுவில் கமல்ஹாசன் உரை




“ஒரு தமிழன் பிரதமர் ஆக நாட்டை தயார்படுத்த வேண்டும் என மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

சென்னை, தேனாம்பேட்டையில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் இரண்டாவது பொதுக்குழு கூட்டம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் கமல்ஹாசன் உரையாற்றுகையில்,

“அரசியலுக்குள் நுழையும்போது வேண்டாம் என்றார்கள். மக்கள் தோற்ற அரசியல்வாதியை கூட நினைவில் வைத்துக் கொள்வார்கள் என்னைத்தான் சொல்கிறேன். தோல்வி என்பதும், பிரதமர் பதவி என்பதும் நிலையானவை அல்ல. ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதெல்லாம் எவ்வளவு ஆபத்தான பேச்சு. இந்தியாவுக்கு அது தேவையில்லை, தேவைப்படாது. கடந்த 2014 இல் நாடு முழுவதும் ஒரே தேர்தல் நடத்தியிருந்தால் இன்றைக்கு இந்தியாவின் கதி என்ன? ஒட்டுமொத்தமாக அனைத்து தொகுதிகளையும் கீரைக் கட்டு போல் கையில் எடுத்திருப்பார்கள். அதன் பிறகு ஒரு திருநாமம் தானே இங்கு உரைக்கப்படும்.

அடுத்த 5 ஆண்டில் இதைச் செய்தால்தான் நமக்கு வழி விடுவார்கள் என்ற பயம் ஆட்சியாளருக்கு வேண்டும். எப்படி ஜனநாயகத்தை புரட்டிப் போடுவது என குழம்பிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் தொகையை கட்டுப்படுத்த அறிவுறுத்தினர். அதை பின்பற்றியதற்காக நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை குறைக்க பார்க்கின்றனர். நாட்டை நடத்திக் கொண்டிருப்பது நாம் கொடுக்கும் பணம். சகோதர மாநிலங்களை பட்டினி போடச் சொல்லவில்லை. பகிர்ந்து உண்போம் என்கிறேன். சந்திரனுக்கு ராக்கெட் அனுப்பிய நம்மால் அவர்களுக்கு ஒரு தூதுவிட முடியவில்லையே. அந்தக் குரலாகத்தான் நாம் இருக்க வேண்டும். நான் இருப்பேன். ராஜகோபால் என்னும் தெலுங்கு பேசுபவர் இங்கு முதல்வராக இருந்தார். ஆனால், ஒரு தமிழன் பிரதமர் ஆக முடியுமா? அதற்கு நாட்டை தயார்படுத்த வேண்டும். கோவையில் நடந்தது தோல்வி என்றால் அவர்கள் வென்று ஆட்சிக்கு வந்தது வெற்றியல்ல.

ஒரு பூத்துக்கு குறைந்தது 5 பேர் நியமிக்கப்பட வேண்டும் என 7 ஆண்டுகள் கழித்து கெஞ்சும்படி வைத்துவிட்டீர்களே. நம் தலைவர் அவ்வளவு பெரியவர் என கூட்டம் போட்டு சொல்ல வேண்டாம். கூட்டம் எவ்வளவு பெரியது என காட்ட வேண்டும். நான் எவ்வளவு பெரியவன் என காட்ட வேண்டிய இடத்தில் காட்டுகிறேன். நாளை அரசியல் நம்மை பார்த்து பேசப் போகிறது.

இன்றைய அரசியல்வாதிகள் குறிப்பாக முதல்வர், நாம் எவ்வித எதிர்பார்ப்புமின்றி நன்றாக தேர்தல் பணி செய்ததாக கூறினார். 2026 தேர்தலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளை செய்தே ஆக வேண்டும். மறுபடியும் சினிமாவுக்கு சென்றுவிட்டதாக விமர்சிக்கின்றனர். பின்னர் கோட்டை கஜானாவில் இருந்தா பணம் எடுக்க முடியும்? முழுநேர அரசியல்வாதி யாருமே இல்லை. கிடைக்கும் நேரத்தில் சரியாக வேலை செய்தால் போதுமானது. இன்றைக்கு எனக்கு என்ன என கேட்காதீர்கள். வேலை செய்யுங்கள், நாளை நமதாகும்.” – என்றார்.



# இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் ஆயுத கிடங்கு, ரொக்கெட் ஏவுதளம் அழிப்பு

இஸ்ரேல் இராணுவம் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது.

கடந்த 17 ஆம் திகதி ஹிஸ்புல்லாக்கள் பயன்படுத்திய 5,000 பேஜர்கள் ஒரே நேரத் தில் வெடித்துச் சிதறின. இதில் 879 பேர் உயிரிழந்திருந்தனர் எனவும் 4,000 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்துவோம் என்று ஹிஸ்புல்லா அமைப்பு எச்சரிக்கை விடுத்தது. இந்த சூழலில் இஸ்ரேல் இராணுவத்தின் போர் விமானங்கள் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் வெள்ளிக்கிழமை அதிகாலை வரை லெபனானில் ஹிஸ்புல்லா முகாம்களை குறிவைத்து மிகப்பெரிய தாக்குதல்களை நடத்தியது.

இதில் ஹிஸ்புல்லாவின் 100 ரொக்கெட் ஏவுதளங்கள் மற்றும் 1,000 ரொக்கெட் பேரல்கள் அழிக்கப்பட்டன. ஆயுத கிடங்குகளும் அழிக்கப்பட்டன.


இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறும்போது,

“இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தயாராகி வந்தனர். இதை தடுக்க அவர்களின் ஏவுகணை தளங்கள்,ஆயுத கிடங்குகளை முழுமையாக அழித்துள்ளோம்” என்று தெரிவித்தன.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா கூறும்போது, “இஸ்ரேல் வரம்பு மீறி செயல்படுகிறது. அந்த நாட்டு இராணுவம் லெபனான் மண்ணில் கால் வைத்தால் மிகப்பெரிய போர் வெடிக்கும்” என்று தெரிவித்தார்.







# இன்றைய ராசி பலன்கள் -22.09.2024

## மேஷம்

இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.

## ரிஷபம்

இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

## கடகம்

எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## சிம்மம்

இன்று நேர்மறையான ஒத்துப்போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.

## கன்னி

இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## விருச்சிகம்

இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச் சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -22.09.2024




இன்றையநாளைநன்குசெலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

